செய்தி வெளியீடு எண்: 342 நாள்: 23.05.2018

## செய்தி வெளியீடு

தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள ஸ்டெர்லைட் தாமிர உருக்காலையை நிரந்தரமாக மூடக் கோரி தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தை 22.5.2018 அன்று மாவட்ட ஆட்சித் தலைவரால் பிறப்பிக்கப்பட்ட குவிமுச பிரிவு 144–ன்படியான தடை உத்தரவை மீறி பல்லாயிரக்கணக்கான நபர்கள் முற்றுகையிட்டதைத் தொடர்ந்து ஏற்பட்ட சட்டம் ஒழுங்கு சம்பவங்கள் குறித்து விசாரணை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பித்திட, ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் திருமதி அருணா ஜெகதீசன் அவர்கள் தலைமையில் ஒரு நபர் விசாரணை ஆணையம் (Inquiry Commission) அமைத்து இன்று (23.5.2018) தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது.

வெளியீடு: இயக்குநர், செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.